DEPOSITION OF WITNESS

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், கிருஷ்ணராயபுரம்**

**CC.No. 100/2021**

Prosecution **PW.5**

Court

| | | | |
|---|---|---|---|
| பெயர் : | பாரத் | கிராமம் : | |
| தந்தைபெயர் : | புகேழுந்தி | வட்டம் : | |
| மதம் : | | தொழில் : | |
| ஜாதி : | | வயது : | 40 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 08.05.2026

எதிரி VC மூலம் ஆஜர்படுத்தப்பட்டார். வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் விசாரணை**

1. நான் கரூர் மாவட்டம், குளித்தலை வட்டம் பொய்யாமணி கிராமம், திருச்சாப்பூர் கிராமத்தில் குடியிருந்து எலக்ட்ரிக் பிளமிங் காண்ட்ராக்ட் வேலை செய்து வருகிறேன். எதிரி சிவசுப்பிரமணியம் எனக்குத் தெரியும். என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலம் உள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையதுதான். (**ஒப்புதல் வாக்குமூலம் உள்ள முதலாவது கையொப்பம் அ.சா.ஆ.11 குறியீடு செய்யப்படுகிறது.)** கைப்பற்றுதல் மகஜரில் உள்ள முதலாவது கையொப்பம் என்னுடையதுதான். (**கைப்பற்றுதல் மகஜரில் உள்ள முதலாவது கையொப்பம் அ.சா.ஆ.12 குறியீடு செய்யப்படுகிறது.)** எனது மாப்பிள்ளை பிரபாகரன் என்பவரின் பைக் காணாமல் போய்விட்டது மாயனூர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்திருந்தார்.

2. பைக்கை தேடிக்கொண்டு நானும் எனது நண்பர் தியாகராஜனும் 2017 ம் வருடம் 9 வது மாதம் 25 ம் தேதி அன்று இருசக்கர வாகனத்தில் தேடிகொண்டு குளித்தலையில் கரூர் நோக்கி சென்று கொண்டிருந்தோம். அப்போது முடக்குசாலையில் போலிசார் வாகன சோதனையில் ஈடுபட்டுக் கொண்டிருந்தார்கள். அப்போது சிவசுப்பிரமணியன் வந்தவரை விசாரித்த போது தண்ணீர் பாலத்தில் இருந்து எடுத்துவந்துவிட்டதாகவும் போலிசார் விசாரித்த

போது செல்போன் கடையில் இருந்து செல்போன் , லேப்டாப் திருடியதாகவும், திருடிய பொருட்களை திருக்காம்புலியூர் L& T கம்பெனி அருகே ஆற்றுப்படுகையில் குடிசையில் வைத்திருப்பதாகவும் கூறினாா. வண்டியை போலிசாரிடம் ஆஜர் படுத்தினார். தற்போது என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் உள்ள வண்டியை தான் எதிரி போலிசாரிடம் ஆஜர் செய்தார்.

3. Teacher Trainign School லிருந்து Mointer, CPU, Mouse ஆகியவற்றை திருடியதாகவும் கூறினார். அந்த பொட்களை பள்ளிக்கு எதிரில் உள்ள எதிரியின் வீட்டில் வைத்திருப்பதாக கூறினார். போலிசார் அந்த ஒப்புதல் வாக்குமூலத்தை பதிவு செய்தார்கள். போலிசார் என்னையும், தியாகராஜனையும், எதிரியையும் அழைத்துக்கொண்டு L& T கம்பெனி அருகே ஆற்றுப்படுகைக்கு குடிசையில் எதிரி பதுக்கி ஆஜர் செய்திருந்த செல்போன் லேப்டாப் ஆகியவற்றை ஆஜர் செய்தததை போலிசார் கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றினார்கள். பின்னர் Teacher Training School எதிலே உள்ள எதிரியின் வீட்டிற்கு சென்று Mointer, CPU, Mouse எதிரி எடுத்து ஆஜர் செய்தார். கைப்பற்றுதல் மகஜர் மற்றும் ஒப்புதல் வாக்குமூலத்திலும் நானும், தியாகராஜனும் கையொப்பம் செய்தோம். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

**1.** சம்பவம் நடந்த போது நான் என்ன வேலை செய்து கொண்டிருந்தேன் என்றால் சத்தியம் MRF Show room ல் வேலை செய்து கொண்டிருந்தேன். நான் வேலைக்கு போதுதான் போலிசார் என் முன்னிலையில் விசாரித்தார்களா என்றால் இல்லை நான் பைக்கை தேடிவரும் போது விசாரித்தார்கள். புகார்தாரர் எனக்கு என்ன உறவு முறை என்றால் மாப்பிள்ளை ஆவார். நான் பைக்கை தேடிச்செல்லும் மணி என்ன இருக்கும் என்றால் காலை 8.00 மணிக்கு குளித்தலையில் இருந்து கிளம்பி 9.30 மணிக்கு விசாரித்தார்கள். மெயின் ரோட்டில் இருந்து முடக்கு சாலை உள்ளே உள்ளது என்றால் சரிதான் ரோட்டில் போர்டு வைத்துள்ளார்கள். நான் முதல் விசாரணையில் சொன்னது போல் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றாலும் புகார்தாரர் எனது மாப்பிள்ளை என்பதால் நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை : இல்லை**

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

RAMAIYAH BAGYARAJ

Digitally signed by RAMAIYAH BAGYARAJ
DN: cn=RAMAIYAH BAGYARAJ, ou=MADURAI, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.05.11 10:28:53 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
கிருஷ்ணராயபுரம்.